தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1975 அக்டோபர் 25

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவா (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

I.T.I Instructor's Scale of Pay to the Mechanic Teachers

* 11 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal to grant I.T.I. Instructor's Scale of Pay to the Mechanic Teachers working in the Engineering Sections of the High Schools, who possess the same qualifications as the I.T.I. Instructors ?

இயந்திரவியல் ஆசிரியர்களுக்கு தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர் வீதத்தில் சம்பளம்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர்களைப் போன்றே கல்வித் தகுதி பெற்று, அரசு உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த பொறியியல் பிரிவுகளில் பணியாற்றும் இயந்திரவியல் ஆசிரியர்களுக்கும் தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியருக்கு வழங்கப்படும் வீதத்தில் சம்பளம் வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய பாடத் திட்டத்திலே இன்ஜினியரிங், செகரட்டேரியல் போன்ற டைஃபர்கேடட் கோர்ஸூக்கான பாடத் திட்டமானது வரவில்லை. அந்த அடிப்படையிலே 11 ஆண்டுக்கு அந்த வகுப்புகள் நடத்தப்படுவதால், இந்த ஓராண்டுக் காவது டைஃபர்கேடட் கோர்ஸ் இருக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாக ஆராய வேண்டும்.

Mismanagement of G.V.B. High School, Kanniservaipatti in Madurai district.

* 12 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that representations have been made to the Government from the public and the teachers regarding the